# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.13**
**Defence**
**Court**

**Name** **:**சாகுல்ஹமீது

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.12.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது செங்கோட்டை பள்ளிவாசல் தெருவில் குடியிருந்துவருகிறேன். நான் தென்காசியில் கூலக்கடைபஜாரில் ஏ.எம்.எஸ் என்ற பெயரில் பலசரக்கு கடை நடத்துகிறேன். வழக்கமாக நான் காலை 10.00 மணிக்கு கடையை திறப்பேன். தென்காசி அலாவுதீனை(புகார்தாரரை) தெரியாது. வழக்கிற்கு பிறகும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது.

2007ம் ஆண்டு கலவரம் நடந்த விபரம் கேள்விப்பட்டேன். நான் கடைவைத்திருக்கும் பகுதியிலேயே கலவரம் நடந்ததாக கேள்வி பட்டேன். கடை திறக்க வரும்போதே கலவரம் என சொன்னதால் அப்படியே போய்விட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும் தற்போது வேண்டுமென்றே போலீசர் விசாரிக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரித்தபோது 14.08.2007 அன்று 10.15 மணிக்கு நான எனது கடையில் காலை 9.00 மணிக்கு திறந்து வியாபாரம் செய்ததாகவும் சுமார் 10.15 மணிக்கு என் கடையில் இருந்து 100 அடி துாரத்தில் கிழக்கே மேலமுத்தாரம்மன் கோவில் பக்கம் இரண்டு கோஷ்டியினர் கையில் அருவாள் கத்தி போன்ற ஆயுதங்களை கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டிருநதார்கள் என்றும் அதனால் கடை வீதியில் இருந்தவர்கள் மலமலவென கடையை அடைத்துவிட்டு ஓட ஆரம்பித்தோம் என்றும் அப்போது என் கடைக்கு எதிரே நன்கு வளர்ந்த நபர் கையில் அரிவாளுடன் ஓடி வரும்போது கால் தடுமாறி அரிவாளுடன் கடைக்கு அருகில் இருந்த கால்வாயில் கீழே விழுந்தார் என்றும் அவரை பின் தொடர்ந்து வந்த நபர் நவாஸ் என் அவரை அழைத்துகொண்டு விழுந்தவரை துாக்கி விட்டார் என்றும் கீழே விழுந்த நபருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றும் பின் தொடர்ந்த நபருக்கும் காயம் இருந்தது என்றும் நான் அங்கிருந்து ஓடிவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிறுக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சம்பவத்தில் இஸ்லாமியர் 3

நபர்களும் இந்துக்கள் 3 நபர்களும் கொலைசெய்யப்பட்டதை பின்னர் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் வழக்குகள் உள்ளது என்றும் அதில் இஸ்லாமியருக்கு எதிரான வழக்கில் எதிரிகள் சாட்சியாக உள்ளனர் என்றும் இஸ்லாமியருக்கு எதிரான வழக்கில் எதிரிகளுடன் சமரசம் செய்துகொண்டதால் அந்த வழக்கில் எதிரிகளான உள்ள இஸ்லாமியர்கள் என்னிடம் கேட்டுகொண்டதன் பேரில் நான் போலீசார் விசாரணைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**